விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஐப்பசி 24 ரபிஅவ் 7 இதழ் 272

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 10-11 1986

RECEIVED ... 1986 PERIODICAL DIVISION ... JAFFNA ... LIBRARY

## விஜிதரன் மர்மம் தமிழ் மக்களிடையே பாதுகாப்பின்மை, அச்ச உணர்வை ஏற்படுத்துகின்றது!

### அன்னையர் முன்னணி கவலை

யாழ்ப்பாணம். திங்கள். யாழ். பல்கலைக்கழக வர்த்தகபீட மாணவன் விஜிதரன் காணாமல் போயிருப்பது தமிழ் மக்களிடையே பாதுகாப்பின்மையையும், பீதி உணர்வையும் ஏற்படுத்துவதாக உள்ளது.

இவ்வாறு அன்னையர் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக 3ம் வருடமாணவன் அ. விஜிதரன் கடந்த 4-ந் திகதி முதல் காணாமல்போயிருப்பது குறித்து இந்த அறிக்கை மேற்படி முன்னணியினரால் விடுக்கப்பட்டுள்ளது.

மாணவன் விஜிதரனை உடனடியாக கண்டுபிடிக்க உதவும்படியும் கேட்டுள்ள இவ்

(5ம் பக்கம் பார்க்க)



தளபதி திரு. கிட்டு, கோட்டை இராணுவ முகாமைச் சேர்ந்த காப்டன் கொத்தலாவல, கேணல் ஆனந்த வீரசேகர ஆகியோர் பேச்சுவார்த்தையிலீடுபட்டிருப்பதை முதலாவது படத்திலும், கிட்டு இரு ராணுவத்தினருடன் 2ம், 3ம் படங்களில் கை குலுக்குவதையும் காணலாம்.

● நேற்றைய சந்திப்பின் விளைவு

# கைதிகளைபரிமாறபுலிகள், இராணுவத்தினர் இணக்கம்!

## இன்றுகோட்டைவாசலில்பரஸ்பர கையளிப்பு

(அலுவலக நிருபர் ஏ. வி மாணிக்கம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும், இலங்கை இராணுவத்துக்குமிடையே இன்று கைதிகள் பரிமாற்றம் இடம்பெறவுள்ளது. யாழ் கோட்டை முகாமிலிருந்து நேற்றுக்காலை வெளிவந்த இராணுவ உயரதிகாரிகள் புலிகளின் முகாமொன்றில் நடத்திய பேச்சுக்களையடுத்தே இக் கைதிகள் பரிமாற்றத்துக்கு இணக்கம்காணப்பட்டது.

யாழ் செயலகத்துக்கு அண்மையில் உள்ள விடுதலைப்புலிகளின் முகாம் ஒன்றில் இப்பேச்சுவார்த்தை இடம் பெற்றது.

பத்திரிகையாளர்களோ வேறு எவருமே இப் பேச்சுக்களில் பங்கேற்க அனுமதிக்கப்படவில்லை புலிகளின் பாதுகாப்புக்கு மத்தியில் அந்தரங்கமான முறையிலேயே இப் பேச்சுக்கள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

கேர்ணல் ஆனந்த வீரசேகர காப்டன் கொத்தலாவல ஆகியோர் இப்பேச்சுக்களில் இராணுவதரப்பில் பங்குபற்றினர். புலிகள் தரப்பில் திரு கிட்டு தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டனர்.

மனிதாபிமான அடிப்படையில் சுமுகமான முறையில் இப்பேச்சுக்கள் இடம்பெற்ற

(5-ம் பக்கம் பார்க்க)

## காப்டன் ஆச்சரியம்....

யாழ்ப்பாணம், திங் காப்டன் கொத்தலாவல விடுதலைப் புலிகளின் முகாமில் இடம்பெற்ற சந்திப்பின்போது நவீன துப்பாக்கி ஒன்றை எடுத்துப் பார்வையிட்டார்.

''பெரேட்டா சப் மெஷின் கண்'' என்றழைக்கப்படும் அந்த துப்பாக்கியை கையில் எடுத்துப் பார்வையிட்ட கப்டன் புலிகளிடம் இது இருப்பது குறித்து ஆச்சரியமடைந்தாராம். (மா)

## போராளி தூக்கி வந்தார்!

யாழ்ப்பாணம், ஞாயிறு அடம்பனில் நடைபெற்ற நேரடிச்சமரில் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட 2வது லெப்டினட் அஜித்சந்திர சிறியும், கோப்ரல் எம். எச். பண்டாரவும் நேற்றைய பேச்சுக்களின் போது சமுகமளித்து தமது இராணுவசகாக்களுடன் மிகவும் மகிழ்ச்சியுடன கலகலப்பாக உரையாடினர்.

(5-ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் திடீர் தாக்குதல் வானில்வந்த 7 இளைஞர் பலி!

வவனியா. ஞாயிறு. வவனியா-மன்னார் வீதியில் பூவரசங்குளம் என்ற இடத்தில் இன்றுகாலை 10 மணியளவில் ராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய திடீர்தாக்குதலில் 7 இளைஞர்கள் பலியாகியுள்ளனர்.

வான் ஒன்றில் வந்துகொண்டிருந்த இவ்விளைஞர்கள் மீது இராணுவம் மறைந்திருந்து திடீர்தாக்குதல் நடத்தியதாகவும் 7 பேர் பலியானதாகவும் தெரிகின்றது.

மரணமான 7பேரில் ஒருவரின் சடலத்தைமட்டும் ராணுவத்தினர் தம்முடன்கொண்டு சென்றுள்ளனர் ஏனைய ஆறு சடலங்களும் அதே இடத்தில் விடப்பட்டிருந்தனவாம்.

## சிரேஷ்ட ராணுவ உயரதிகாரியாக தமிழர் நியமனம்

கொழும்பு. ஞாயிறு இலங்கை இராணுவத்தின் சிரேஷ்ட உயர் அதிகாரியாக பிரிகேடியர் ஜோர்ஜ் தேவநாயகம் என்ற தமிழர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவப் படையின் தளபதிக்கு அடுத்ததாக விளங்கும் 'சீப் - ஒவ் - ' என்ற பதவிக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் இப்பதவிக்குத் தகுதி பெற்றிருந்த பிரிகேடியர் மனோ மடவல செப்டம்பர் 7-ம் திகதியுடன் ஓய்வு பெற்றதையடுத்தே பிரிகேடியர் தேவநாயகம் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இலங்கை ராணுவத்தின் தொண்டர் படையின் பொறுப்பதிகாரியாக இருந்து வந்தார். (ஊ)

## நண்பர்கள் கூடினர்

யாழ்ப்பாணம், திங்கள் இராணுவ அதிகாரிகள் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டுகோட்டை இராணுவமுகாமுக்குத் திரும்ப முன்னர் நல்லூர்கந்தசுவாமி கோவிலுக்குச் சென்று பார்வையிட்டனர். சில நிமிடம் அங்கு தரித்துநின்று விட்டுப் புறப்பட்டதும்கேர்ணல் ஆனந்த விஜயசேகர. தமது இளமைக் கால நண்பரான யாழ். உதைபந்

(5ம் பக்கம் பார்க்க)

## நிராயுதபாணிகளாக வெளியேவந்தனர்

(அலுவலக நிருபர்)

அடம்பனில் கைதாகி புலிகளின் பாதுகாப்பிலுள்ள இருஇராணுவ சிப்பாய்களையும் விடுவிக்கும் வகையில் பேச்சுக்கள நடத்த யாழ் கோட்டை முகாமிலிருந்து கேர்ணல் ஆனந்த வீரசேகர, காப்டன்கொத்தலாவல ஆகியோர், வேறுபன்னிரண்டு சிப்பாய்கள் சகிதம்நிராயுதபாணிகளாக வெளியேவந்தனர்.

இவர்களை புலிகள் தரப்பில் திருவாளர்கள் ரஹீம், திலீபன் ஆகியோர் வரவேற்று திரு. கிட்டுவிடம் கூட்டிச் சென்றனர்.

கோட்டை முகாம்அதிகாரிகளைஎதிர்பார்த்து ஆயுதபாணிகளான போராளிகளுடன் பெருமளவு பொதுமக்களும் 'வாடி வீடு' ஒன்றுனருகே நின்றனர்.

அறிமுகங்களையடுத்து இராணுவ அதிகாரிகள் ஒரு மோட்டார்காரிலும் அவர்களுடனவந்த சிப்பாய்கள் 'எல்வ்' வாகனமொன்றிலும் புலிகளின் முகாம் நோக்கிச்சென்றனர்.

காப்டன் கொத்தலாவல தம்முடன் 'வாக்கிடோக்கி' ஒன்றை மட்டுமே வைத்திருந்தார் இராணுவத்தினர் அனைவரும் தத்தமது தரங்களுக்குரிய சீருடைகளுடன் காணப்பட்டனர். (மா)

## "போராளிகள் கைது ஒரு சட்ட ஒழுங்கு விவகாரம்!"

### இந்திய அரசு அறிவிப்பு

புதுடில்லி, நவ 9 தமிழ்நாட்டில் தமிழ்ப் போராளிகள் மீது நேற்று எடுக்கப்பட்ட நடவடிக்கை, தமிழகத்தின் சட்ட ஒழுங்கு நிலைமையுடன் தொடர்புடையதாகும் என புதுடில்லி மத்தியஅரசு அதிகாரி ஒருவர் செய்தியாளரிடையே பேசுகையில் தெரிவித்துள்ளார்.

அந்த அதிகாரிமேலும் தெரிவிக்கையில் அவசியம் ஏற்பட்டதால் இந்த நடவடிக்கை மாநில அரசினால் மேற்கொள்ளப்பட்டதெனவும், இதுபற்றி

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழி (Broilers) விற்பனைக்குண்டு. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். (C 5637)

சகல வேலைகளும் செய்யக்கூடிய மரவேலை இயந்திரம் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: N குணதாசன், சிவன் வீதி, ஆவரங்கால். (C 5640)

இறைச்சிக் கோழிகள் (Broiler), விருத்துக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும்: அண்ணு பாம் இணுவில், (C 3082)

உயரமான மரங்களுக்கு நிலத்திலிருந்தபடி மருந்து தெளிக்கக்கூடிய அதிவலுவுள்ள என்ஜின் பொருந்திய தெளிகருவி விற்பனைக்குள்ளது. அலுவலக நேரங்களில் மட்டும் பார்வையிடலாம். இல. 10, குறுெசெற் ஒழுங்கை, சுண்டுக்குளி (கச்சேரியில் இருந்து 100 யார்). (C-5667)

வீட்டுத் தளபாடங்கள், Kenwood mixer with attachments, rice cooker, Refrirerator T. V. டெக், Pyrex glass வகைகள் மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு: 83/2, K. K. S Rd, கொக்குவில் சந்தி, கொக்குவில், C 5678

கால்நடைகளுக்கு உகந்த விஷேச ''மினரல் மிக்சர் கல்சியப் பவுடர்'' மொத்த மாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். M G. M. 781, K K S. Road, and 208, 1st Cross St, Jaffna. T.P. 22611 (C-5073)

வீட்டுத்தளபாடங்கள், அல்மாரி கட்டில் மெத்தைகள், கசற்றேடியோக்கள், 4 Burner Electric Cooker, பெரிய Kenwood குளிர்சாதனப்பெட்டி, பியானோ எக்கோடியன், மின்சார தேநீர் Boiler மின்விசிறிகள், கிளாஸ் பீங்கான் வகைகள், வீட்டு Showcase, கண்ணாடி மேசைகள், சாப்பாட்டு மேசைகள், எழுது மேசைகள், வெளிநாட்டு T. V. Stand மெலோடிக்கா, சில்வர் பொருட்கள் மற்றும்பலஉடன் விற்பனைக்கு. M தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (C 5644)

## தேவை

ஐந்து வருடத்திற்குக் குறையாத அனுபவமும், நம்பிக்கையும், திறமையும் வாய்ந்த 25-35 வயதிற்குட்பட்ட ஆண் விற்பனையாளர் (Salesman) உடன் தேவை. விளம்பர இல: C 5639 C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். C 5639

யாழ்: பஸ்நிலையத்துக்கு அண்மையில் விவாகம் நிறைவேற்றும் பணியக அலுவலகம் வைக்க பகுதிவீடு அல்லது அறை தேவை. தொடர்பு;- ஸ்ரீ மாவை விநாயகர் மங்கள ஏஜென்சி, கொல்லங்கலட்டி தெல்லிப்பழை. (C-5681)

பிள்ளைகளை பராமரிக்கவும், பாடம்சொல்லிக் கொடுக்கக் கூடிய நிர்வாகத்திறமையுடைய 30-40 வயதுக்குட்பட்ட பெண்தேவை. அத்துடன் இசைஞானமுடையபயிற்றப்பட்ட பாலர் பள்ளி ஆசிரியைகள் இருவர் தேவை. தகுதியுடன் விண்ணப்பிக்கவும். புதுவாழ்வு நிலையம், கூளாவடி. ஆனைக்கோட்டை. (C-5691)

## வகுப்புகள்

A/L 87 துரிதமீட்டல்வகுப்புகள் பல வருட அனுபவமிக்க பிரபல விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்கள் இணைந்து நடாத்துகின்றனர் தாவரவியல் திரு. சிவ வீரசிங்கம், விலங்கியல் திரு. தம்பிராஜா, தூய பிரயோக கணிதம் திரு. பிரேம்நாத் பௌதிகம் திரு. ரவீந்திரநாதன் இவ்வகுப்புக்கள் 11-11-86 செவ்வாய் கிழமை 2.30 p m ஆரம்பமாகவுள்ள பிரபல்ய துரித மீட்டல் இரசாயன வகுப்புகளுடன் இணைந்து ஆரம்பமாகவுள்ளன. 3ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம் (P. M. C. முன்பாக). (C 5605)

## மணப்பந்தல்

கனடா பிரஜையாகி அங்கே பணிபுரியும் 30வயது இந்துப் பெண்ணுக்கு மணமகன் தேவை. இவர் இரண்டுவாரத்தில் லீவுமுடிந்து செல்கிறர். தொடர்புக்கு: சகாயர் திருமணசேவை, புதுவாழ்வு நிலையம், கூளாவடி, ஆனைக்கோட்டை. (C-5690)

## MATRIMONIAL

Brother seeks partner for marriage to his 38 years old sister Science Trained Teacher] Hindu Vellala famiy Please writ Advt. No. C-5682, C/o Eelanadu, Jaffna. (C-5682)

## சேவை

வெளிநாடு செல்பவர்கள் உங்கள் வீட்டுத்தளபாடங்கள் மற்றும் பாவனைப்பொருட்களை (தையல் மெஷின்) முதலியவற்றை விற்பனை செய்ய உடன் தொடர்பு கொள்ளவும், பழைய தளபாடங்களை மாற்றுதல் செய்யவும் தொடர்பு கொள்ளவும்: M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். C 5643

கைரேகை, எண்சோதிடம் கிரகநிலை விபரமாகப்பார்த்து உண்மைநிலை சொல்லப்படும். இத்துடன் மணமகள், மணமகன் தேவையானவர்களும் உடன்தொடர்புகொள்ளலாம் செவ்வாய் குற்றமுள்ள சாதகர்களுக்கு முதலிடம் உண்டு. செ. நாகேந்திரராசா, 174/16, கோவில்வீதி. (கைலாசபிள்ளையார் கோவிலடி) யாழ்நகர். (C-5499)

முற்றிலும் தன்னியக்க இயந்திரங்கள் மூலம் தயாரானது

தரமானது புறு மார்க் சுத்தமான கற்பூரம்

★ தெய்வீகமானது
★ உருகாது
★ கருகாது
★ நெடுநேரம் எரியக்கூடியது
★ பிரகாசமானது

(A-768)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி அன்னம்மா இராமதாஸ்

தோற்றம்: 04 09-1932
மறைவு: 11-10-1986

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எமக்கு உறுதுணையாக இருந்து திடீரென எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எமது அன்புத் தெய்வமே உமது ஆத்மா சாந்தியடையஇறைவனைபிரார்த்திக்கும்!

அன்புக் கணவன்,
பிள்ளைகள்.
68, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
[C 5531]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



கிருஷ்ணர் செல்லையா
(செல்வா வீதி, அராலி வடக்கு, வட்டுக்கோட்டை)

தோற்றம்: 22-05-1903
மறைவு: 02-11.1984

அராலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் அமைதியின் இருப்பிடமாய் எங்கள் குடும்பத்தினர் யாபேருக்கும் வழிகாட்டியாய் உற்றுர், உறவினர், அயலார் போற்ற நடந்த எங்களின் அன்புத் தெய்வமே! எங்களை விட்டுப் பிரிந்து இரண்டு வருடமாகியும் உங்களின் ஆக்க முயற்சியின் உதவியினுல் வாழ்ந்து கொண்டு இருக்கின்றேம். உங்களின் ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல அராலி முருகனை வேண்டுகிறேம்.

உங்கள் பிரிவால்
துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள்
மருமகன், மருமக்கள்,
பேரப் பிள்ளைகள்,
ஸ்ரீ முருகன்
றைக்கிளினேர்ஸ்'?,
நவீன சந்தை நம்பர் 12,
யாழ்ப்பாணம்.
(C5685)

## 21-வது நாள் நினைவஞ்சலி



வ. மு. கந்தசாமி
(யொகுபார், சிங்கப்பூர்)

காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த காலஞ்சென்ற வைத்திலிங்கம் முருகேசு தம்பதிகளின் இரண்டாவதுமகன் திரு. வ. மு கந்தசாமி அவர்களின் 21ஆவது சிரார்த்த தினம் இன்று (10-11-86) ஆகும். அன்னரின் ஆத்மா சாந்திடைய எங்கள் எல்லோரின் பிரார்த்தனையைச் சமர்ப்பிக்கின்றேம்

உற்றுர், உறவினர்.
தங்கோடை,
காரைநகர். (C 5676)

## 12-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
சுப்பிரமணியம்
மங்கையற்கரசி

தோற்றம்: 17-09-1910
மறைவு: 10-11-1974
திதி: ஐப்பசி ஏகாதேசி

புலோலி கிழக்கு, பருத்தித்துறை, பசுபதீஸ்வரர் தேவஸ்தான உரிமையாளராகிய காலஞ்சென்ற இராமசாமிச் செட்டியார் தம்பதிகளின் அருமைப் பேத்தியும், குளப்பிட்டி கொக்குவில் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை அப்பாக்குட்டி சாஸ்திரியார் தம்பதிகளின் அருமைப் பேத்தியும், காலஞ்சென்ற கொக்குவில் அப்பாக்குட்டி செல்லையா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், மட்டக்களப்பு காலஞ்சென்ற முடிக்குரிய சட்டத்தரணி கனகரட்டினம் முதலியார் சுப்பிரமணியம் தம்பதிகளின் அருமை மருமகளும், காலஞ்சென்ற சுந்தரம் சுப்பிரமணியத்தின் மனைவியும், வாமதேவன், சகாதேவன், மகாலட்சுமி, தியாகலிங்கம் ஆகியோரின் அருமைத்தாயாரும் வலாம்பிகை இராஜேஸ்வரி, மகேஸ்வரன் ஆகியோரின்மாமியாரும், சுபேந்திரன், சுபாசினி, சுந்தரி, கோணேஸ்வரன், காயத்திரி, சுரஞ்சன், சஞ்சுலா ஆகியோரின் பேத்தியுமாவர். அன்னரை நினைவு கூரும் பிறசந்ததியினர்.

''பாக்கியவாசா'',
செட்டித்தெரு.
பருத்தித்துறை.
(C 5670)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றம்

பருத்தித்துறை வீதி, 88/9ம் இலக்கத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற முத்துக்கிருஷ்ணபிள்ளை மகன் டாக்டர் சண்முகதாசா என்பவரது மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்.
மூத்ததம்பி முத்துக்கிருஷ்ணபிள்ளை, இல 88/9 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

மனுதாரர்:

வழ. இல. ரி/3996

எதிராக

முத்துக்கிருஷ்ணபிள்ளை பெண் இராசமணி, இல 88/9, ருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

எதிர்மனுதாரர்:

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள்எவரும் 1986ம் ஆண்டு கார்த்திகை மாதம் 14ந் திகதியன்று முற்பகல் 9மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறுபதியப்பட்டபின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றுர்.

1986ம் ஆண்டு ஐப்பசி மாதம் 3ந் திகதி;

மன்றின் கட்டளைப்படி,

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைதல்:
ச. மகேசன்,
மனுதாரின்
சட்டத்தரணி. (C 5664)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



இராசம்மா பொன்னையா
[சமத்தர்]

மலர்வு: 14-1-1914
உதிர்வு: 10-11-1985

''நாம் சீவித்தாலும் ஆண்டவருக்கென்றே சீவிக்கின்றேம். மரித்தாலும் ஆண்டவருக்கென்றே மரிக்கின்றேம். இவளின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இறைவனை இறைஞ்சுகின்றேம்.''

இவளின் பிரிவால்
துயருறும்
மக்கள், மருமக்கள்,
உறவினர்கள்.
(C 5618)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை அரசு யோசனைகள்: போராளிகளின் கருத்தை ராஜீவிடம்

# எம். ஜி. ஆர். விளக்கிக் கூறினர்

புதுடில்லி நவ 9

இலங்கை இனப் பிரச்னைக்கு தீர்வு காணும் முகமாக இலங்கை அரசினல் அண்மையில் வெளியிடப்பட்ட புதிய யோசனைகள் குறித்து தமிழ்ப் போராளிகள் கொண்டுள்ள கருத்துக்களை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் தமிழக முதல்வர் திரு எம். ஜி ராமச்சந்திரன் நேற்று விளக்கிக் கூறினர்.

நேற்று பிரதமர் ரஜீவ் காந்தியை அவரது இல்லத்தில் சந்தித்த திரு. எம் ஜி ராமச்சந்திரன் சுமார் அரை மணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் கருத்துக் குறித்து தெரிந்துகொள்வதற்காக பிரதமர் ராஜீவ் காந்தியினல் திரு எம். ஜி ராமச்சந்திரன் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இச்சந்திப்பின்போது இலங்கையில் அதிகாரப் பரவலாக்கல் குறித்த யோசனைகளில் தமிழ்ப்போராளிகளுக்குமுழுத் திருப்தியில்லை என தெரிவித்த தமிழக முதல்வர் தங்களுக்கென ஒருதாயம் வேண்டுமென்ற கருத்தில் தமிழ்ப் போராளிகள் பிடிவாதமாக இருப்பதாகவும் அப்போது தான் கௌரவத்துடனும் மரியாதையுடனும் வழமுடியுமென அவர்கள் கருதுகிருர்கள் என்றும் திரு ராஜீவ் காந்தியிடம் எடுத்துக் கூறினர்.

இவ்வாறு போராளிகளின் கருத்தை திரு ராஜீவ் காந்தி தெரிந்துகொண்டபின் அடுத்த வாரம் பெங்களூரில் நடைபெறும் தெற்காசிய சங்கத்தின் மண்டல மாநாட்டில் கலந்து கொள்ளவரும் ஜனதிபதி ஜெயவர்த்தனவிடம் இதுதொடர்பாக பேச்சுக்கள் நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ)

---

தமிழகத்தில்———

## இலங்கை அகதிகளுக்கு நவீன வசதிகளுடன்வீடுகள்!

சென்னை நவ 9

தமிழகத்திலுள்ளஇலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நவீனவசதிகளுடன் கூடிய வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன.

இவ்வீடுகள் கொடைக்கானலில் கட்டப்படுமென்றும் ஒவ்வொரு வீட்டுடனும் 2 ஏக்கர் நிலமும் கறவை மாடு ஒன்றும் குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு குடும்பத்தினதும் அளவுக்கேற்ற வகையிலேஅத்தியாவசிய தேவைகளுடன் நவீன அமைப்பைக்கொண்டதாக இந்தவீடுகள் இருக்குமென்று கூறப்பட்டது.

---

## உலகச் செய்திகள்

தென்னுபிரிக்காவிற்கு———

## எதிரான முயற்சிக்கு போலந்து ஒத்துழைப்பதாக அறிவிப்பு

ஹராரே நவ 9

தென்னுபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையை முடிவுக்குக்கொண்டுவர இந்தியாவும் மண்டல சார்பற்ற இயக்கமும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாக போலந்து தெரிவித்துள்ளது

போலந்து அதிபர் திரு யாறு ஷெல்கி ஹராரேயில் நடைபெற்ற எட்டாவது மண்டல சார்பற்ற உச்சி மகாநாட்டில் இந்தியாவின் பணியை பாராட்டினர்.

பிரிட்டோறியா ஆட்சிக்கெதிரான போராட்டத்திற்கான முன்னரங்க நாடுகளுக்கு இயன்றளவில் உதவிகளை அளிப்பதாகவும் அவர் உறுதியளித்தார். (ஒ)

---

பிலிப்பைன்ஸ் ஜனதிபதி———

## தமது விசேஷ அதிகாரத்தை கைவிட்டுவிட்டார்!

மணிலா நவ 9

பிலிப்பைன்ஸ் ஜனதிபதி திருமதி அக்கினே அரசியல் எதிரிகளைக் கைதுசெய்து காவலில் வைப்பதற்கான தமது விசேஷ அதிகாரத்தைக் கைவிட்டுவிட்டார்.

மூன்று அதிபர்களின் பதவிக் காலத்திலிருந்த இந்த அதிகாரம் இவருக்கு முன் அதிபராக இருந்த திரு. பேடினன் மார்க்கோஸினல் அதிகம் பயன்படுத்தப்பட்டது.

இத்தகைய நடவடிக்கைகள் அந்நாட்டு மக்களின் சுதந்திர உரிமைகளுக்கு குழிபறிக்கும் என்று கூறி திருமதி அக்கினே இந்த அதிகாரத்தை நீக்கினரென தெரியவருகிறது. (ஒ)

---

ஜம்மு காஷ்மீரில்———

## சிறந்த நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டுகோள்

புதுடில்லி நவ 9

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் புதியமுதலமைச்சர் டாக்டர் பரூக் அப்துல்லா அங்கு இருந்தநிர்வாகத்தை நடைமுறைப்படுத்த சிவில் ஊழியர்களின் ஒத்துழைப்பைக் கோரியுள்ளார்.

நேற்று இவ்வூழியர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் நிர்வாகத்தின் அனைத்து மட்டங்களிலும் மக்களுக்குப் பதில் சொல்லப்பட வேண்டிய பொறுப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமென்றுதெரிவித்தார். (ஒ)

---

## மதுபான விற்பனை குறித்து அரசின் புதிய தீர்மானம்

கொழும்பு, ஞாயிறு

வெளிநாட்டு மதுபான கடைகள் தவறணைகள், சில்லறை விற்பனை நிலையங்கள் ஆகியவற்றுக்கு புதிய மதுமான லைசென்ஸ்கள் விநியோகம் செய்வதை நிறுத்துவதென அரசு தீர்மானித்துள்ளது.

இவைகளுக்கு லைசென்ஸ் வழங்குவது இனிமேல் ஜனதிபதி ஜெயவர்தனவின் தலைமையிலான அமைச்சரவை உப குழுவின் அனுமதியுடன் தான் வழங்க முடியும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனினும் உல்லாசப் பிரயாணிகள் ஹோட்டல்கள், வாடி வீடுகள், ஆகியவற்றுக்கு இவ் விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன

இவற்றுக்கு இலங்கை உல்லாசப் பிரயாணிகள் சபை இராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் சிபார்சுடன் லைசென்ஸ் வழங்கப்படும்.

லைசென்ஸ் விநியோகிப்பதற்கான உப கமிட்டியில் ஜனதிபதி, பிரதமர், நிதி அமைச்சர், உள்நாட்டு அலுவல் அமைச்சர் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

புதிதாக லைசென்ஸ் பெறுவதற்கு மேற்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் கலால் திணைக்களத்தினலும், அரசாங்க அதிபர்கள் மூலம் உள்நாட்டு அமைச்சினலும் பெறப்படும் பின்பு அவை அமைச்சின் உப கமிட்டிக்கு அனுப்பப்பட்டு அதன் அனுமதி பெறப்பட்டால் மட்டுமே லைசென்ஸ் வழங்கப்படும். (கே)

---

## ஒய்வூதியம்

யாழ்ப்பாணம்' வியா

யாழ்ப்பாணம் தபாற் கந்தோரிலும் அதன் கீழ் இயங்கும் உப தபால் அலுவலகங்களிலும் அக்டோபர் மாத ஒய்வூதியத்தைப் பெருதோர் நாளை 11ம் திகதி செவ்வாய்க்கிழமை பெற்றுக்கொள்ளலாமென யாழ் தபாற் கந்தோர் உயரதிகாரியொருவர் ஈழநாடுவுக்குத் தெரிவித்தார், [ஊ]

---

## பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன

புங்குடுதீவு, ஞாயிறு

தேசிய தொழிற் பயிற்சியினல் கிராமியத்திட்டத்தில் நடாத்தப்பட்டுவரும் தொழிற் பயிற்சிக்கான பயிற்சி வகுப்புகள் புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கம் புங்குடுதீவு கொழும்பு ரெயிலர் ஆகிய தனியார் நிறுவனங்களிலும் நடைபெற்று வருகின்றன.

புங்குடுதீவு மத்தி கிழக்கு ஆகிய பிரிவுகளில் விண்ணப்பித்தவர்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்ட எழுதுவினைஞர். தையல் வேலையாளர் ஆகியோருக்கு ஒருவருடத்திற்குப் பயிற்சியளித்து மாதாந்தம் 300 ரூபா வீதம் கொடுத்து வருட முடிவில் பரீட்சை ஒன்று நடாத்தப்பட்டு அதில் அவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன இதற்கான ஒழுங்குகளை புங்குடுதீவு மத்தி கிழக்கு விசேட சேவை அலுவலர் பிரிவில் திருமதி எஸ். எஸ் இராமகிருஷ்ணன் மேற்கொண்டு வருகிருர், (ஊ)

---


# பவர்ஸ் உரம்

அதிக விளைச்சலுக்கும்
கூடிய இலாபத்துக்கும்

ரூபா 2,000/- க்கும் மேல்

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
5, மேல் சத்தம்ஸ் வீதி,
கொழும்பு-1.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

எமது முணுமுணுப்புகள் பலவற்றுக்கும் சிறுவிடயங்கள்தான் மூலவேராகவுள்ளன. மனிதர்கள் மலைகள் மீது ஏறும் போதல்ல, சிறு கற்களின் மீதுதான் இடறி விழுகிறார்கள்.

—சீனப்பழமொழி

# நமது நோக்கு

## காணாமல் போயுள்ள பல்கலைக்கழக மாணவன்

யாழ். பல்கலைக்கழக வர்த்தகபீடத்தைச் சேர்ந்த மூன்றாம் வருட மாணவன் அ. விஜிதரன் கடந்த 4ம் திகதி இரவு முதல் தாம் தங்கியிருந்த வீட்டிலிருந்து காணாமல்போய் இருக்கிறார்

இவரது மறைவு மிகவும் மர்மமான முறையில் நடைபெற்றிருக்கின்றது. இதனால் பல்கலைக்கழக உபவேந்தரும், ஆசிரியர்களும், மாணவர்களும்மட்டுமன்றி, இப்பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் அக்கறையுள்ள அனைவருமே கவலைகொண்டுள்ளார்கள்.

துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் விடுத்துள்ள அறிக்கையைப் பார்க்கையில் இச்சம்பவம் குறித்து அவர் எவ்வளவு தூரம் மனம் நொந்துபோயிருக்கிறார் என்பது வெளிப்படுகின்றது

''பல்கலைக்கழக மாணவன் அதுவும் வெளியூர் மாணவன் காணமல் போனால் அல்லது கடத்தப்பட்டால் விரிவுரைகட்கு மாணவர்கள் வரமாட்டார்கள், இதனால் பல்கலைக்கழகம் இயங்கமுடியாமல் போகும்'' என குறிப்பிட்டுள்ள பேராசிரியர் வித்தியானந்தன், ''காணாமல் போயிருக்கும் மாணவனைக் கண்டுபிடிக்கமுடியாமல் போனால் எமது பல்கலைக்கழகத்துக்கும் சமூகத்துக்கும் இழிவு ஏற்படும்'' எனவும் அங்கலாய்க்கின்றார்.

அவர் மேலும் ''இதனால் பிரச்சினைகள் வளர்ந்து பலவித விபரீதவிளைவுகளுக்கும் இடமேற்படலாம்'' என அச்சம் தெரிவிக்கின்றார்.

குறிப்பிட்ட மாணவன் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் என்பதாலும், பாதுகாப்பின் நிமித்தம் இங்கு படிக்க வந்தவர் காணமல் போனதினால் கிழக்குமாகாணமக்கள் மதியில் தவறான கருத்துகள் உருவாக வழிபிறக்கும் எனவும் துணைவேந்தர் கவலைப் படுவதாகத் தெரிகின்றது.

மகனை அழைத்துச் செல்வதற்காக யாழ்ப்பாணம் வந்துள்ள தந்தையான அருணகிரிநாதன் அவரைக் காணாது அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளார். மட்டக்களப்பில் அவர் ராணுவத்தால் கைது செய்யப்பட்டதாகவும் பின்னர்பாதுகாப்புக் கருதி இங்கேஅனுப்பியதாகவும் கூறியுள்ள அவர் தமது குடும்பமே இவரின் கல்வி முன்னேற்றத்தில்தான் தங்கியிருப்பதாக தெரிவித்துள்ளார்,

இம்மாணவர் தாமாகவே வெளியேறிச் சென்றுள்ளாரா? அல்லது எவராலும் கடத்தப்பட்டாரா? என்பது இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை.

இராணுவ நடமாட்டம் இல்லாத பகுதியிலிருந்து இவர் காணமல் போயிருப்பதால் விடுதலை இயக்கங்களை நோக்கி இயற்கையாகவே சிலர் விரலை நீட்ட முற்படுகிறார்கள். ஆனால் எல்லாஇயக்கங்களுமேதாம் கடத்தவில்லையென அறிவித்திருப்பதாக துணைவேந்தரே கூறுகிறார்.

என்றாலும் காணமல் போயுள்ள இம்மாணவரைக் கண்டுபிடித்து ஒப்படைக்கும் பொறுப்பு இயக்கங்களுக்கு உண்டு என்பதை அவர்கள் மறுக்கவில்லை.

இதனையே பல்கலைக்கழக மாணவர்களும் ஆசிரியர்களும் கூட சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

எனவே காணமல் போயுள்ள விஜிதரனை கூடியவிரைவில் கண்டுபிடித்து அவரது தந்தையிடம் அல்லது பல்கலைக்கழக நிர்வாகத்திடம் ஒப்படைப்பது சகலரதும் கடமை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

தனிப்பட்ட முறையில் கோபம்கொண்டஎவராவது தனிநபர் இவரைமறைத்து வைத்திருந்தாலும் கூட இதனால் பல்கலைக்கழகத்துக்கும் இப்பகுதி மக்களுக்கும் ஏற்படக்கூடிய 'இழிவை'ப் போக்கும் வகையில் உடன் விடுவிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

அவர் தவறான முறையில் நடந்திருந்தால் மன்னித்து தம்மிடம் ஒப்படைக்கும்படி அவரது தந்தையார் விடுத்துள்ள உருக்கமான வேண்டுகோள் வீண் போகாது என்பதே எமது நம்பிக்கை.

## பரிசளிப்பு விழா

பண்டத்தரிப்பு, ஞாயிறு

சில்லாலை றோமன் கத்தோலிக்க கனிஸ்ட வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இம்மாதம் 14ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் வித்தியாலய அதிபர் திரு. ஏ. எஸ். லோறன்ஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ் விழாவில் பிரதம அதிதியாக யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார். வட்டுக்கோட்டை வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (ஊ)

## இசை நடன நாடகப்போட்டி

வவனியா, ஞாயிறு

வவனியா மாவட்ட இசை நடன நாடகப்போட்டிகள் அண்மையில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் பிரதம கல்வி அதிகாரி திரு பி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

வவனியா பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு வி. சபாநாயகம் இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்

நடனம், நாடகம், இசை போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பிரதம விருந்தினர் பரிசில்களை வழங்கினார்.

வட்டாரக்கல்வி அதிகாரிகளும் இவ் வைபவத்தில் கலந்து சிறப்பித்தனர் (எ)

# சதா அச்சத்திலும் பீதியிலும் பெரும் பணி நடக்கிறது

## யாழ். ஆஸ்பத்திரியில்

திக்கவயல் தர்மகுலசிங்கம்

ஈழநாடு அலுவலகத்தில் இருந்து வெளியேறிய எனது நடைப்பயணம் யாழ். பஸ்ஸ்ராண்டில் நிலைதடுமாறியது யானைவரும்பின்னே மணியோசைவரும் முன்னே என்பதுபோல துப்பாக்கிச் சத்தங்கள் கோட்டை முகாம் அருகே கேட்டதைத் தொடர்ந்து 'ஷெல்'வரும் நேரம் வந்துவிட்டதுஎன அறிந்த மக்கள் நாலாபக்கங்களிலும் சிதறி ஓடினார்கள். கே. கே. எஸ் வீதியால், ஸ்ருத்திதுறை வீதியால், மானிப்பாய் வீதியால் பலர் அலறிஅடித்துக்கொண்டு ஓடினார்கள்!

கச்சேரியடிப்பக்கமாகப் போகும் பஸ் மாத்திரம் எதுவிதமான பதட்டமும் இல்லாமல் நின்றது ஹட்டன் நேஷனல் வங்கிக்குமுன்னால் 'ஷெல' அடியால் குழிவிழுந்த இடத்தில் அசையாமரம் போல் இந்த மினிபஸ்காரர் நிற்கிறாரே!

......சற்று நேரம் சென்றது.

''துப்பாக்கிச் சத்தம் நிண்டு போச்சு...... ஏனப்பா யோசிக்கிறாய்...... ஷெல்லிற்கு நேரம் கிடக்கு. ......ஏறுங்கோ மடத்தடி, கோட்டடி, கச்சேரி......'

நான் பஸ் ஸ்ராண்டைக் கடந்துகொண்டிருக்கின்றேன்.

இப்ப ஏதோ மண்மூடைக்குச் சத்திரத்துச்சந்திப் பக்கமாகச் சுடுகிறார்களாம்'' ...... இப்படி ஒருகுரல் இவ்வாறு பலவிசயங்களையும் அவதானித்துக்கொண்டு பெரியாஸ்பத்திரிக்குள் நுழைகின்றேன்! மணி இன்னும் பன்னிரண்டாகவில்லை! ஆஸ்பத்திரிக்குள்போக முற்பட்ட என்னைப்பன்னிரண்டு மணிக்குவா எனக் கேட்கீப்பர் தள்ளிவிட்டார். நான் யார் எனச்சொன்னபோது கடைசிக்கேற்றால் போகுமாறுவிடைகிடைத்தது!

ஒரு வைத்திய செயற்குழு உறுப்பினரின் அலுவலகத்தில் நுழைந்தேன். அன்பாக அந்த அதிகாரி வரவேற்றார். அக்கம் பக்கம் அருகே 'ஷெல்' பயத்தின் மத்தியிலும் ஓடியாடி வேலைசெய்யும் தாதிமார்கள் கண்ணில்பட்டார்கள்.

போர்க்களத்தே காயம் உற்ற வீரர்கட்குப் 19ம் நூற்றாண்டில் புளோரன்ஸ் நைட்டிங்கேல் என்ற மேலைத்தேசப் பெண்மணி போர்க்களத்தே விழுப்புண் பெற்ற போர்வீரர்கட்கு வைத்தியம் செய்த வரலாறே இந்தப் பெண்குலத்தைப் பார்த்த போது நெஞ்சில் உறைத்தது.

''எங்கள் பிரச்சினைக்கு வருவோம்என அச்செயற்குழு உறுப்பினர் சொல்லியபோதே சுயநினைவுக்கு வந்தவனாகஅவர் பக்கம் திரும்பினேன். இங்கு ஒரு முக்கியமான விசயமாக உங்களை அழைத்தேன் இங்கு டாக்டர்கட்கு ஏற்பட்டுள்ள இக்கட்டான துன்பங்கள்பற்றி பத்திரிகையாளர்களோ வர்த்தகர்களோ, பொதுமக்களோ நன்கு உணரவில்லை. எங்களின் போராட்டம்பற்றி பத்திரிகைகள் பெரும்சேவை செய்யவில்லை. அதனால் எங்கள் பிரச்சனைபற்றிப் பத்திரிகையாளர்களாகிய நீங்கள் எழுதவேண்டும்''

அவர் சொல்லிய கருத்துக்கள் உன்னிப்பாகக் கவனிக்கத்தக்கவை

ஆஸ்பத்திரியில் வேலைசெய்பவர்கள் அதிகநாள் லீவு எடுக்கமுடியாது அப்படிச்செய்தால் செத்துமடிபவர்கள் எம்மவர்கள்தான்!

ஒவ்வொருநாளும் ஏதாவது ஒரு கிளினிக் இயங்கிக்கொண்டேயிருக்கும்! குறிப்பிட்ட அத்தினத்தன்று அந்தக் கிளினிக் இயங்காதுவிடின் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிப்பு அடைவர்! பெரியாஸ்பத்திரி ஒருபிராந்தியத்துக்கு உரியது அல்ல! இயங்காதிருக்கும் கிளிநொச்சி ஆஸ்பத்திரி வேலை நடந்தும், பொதுமக்கள் அங்கு போகத்தயங்கும் ஆஸ்பத்திரிகள் எனப்பலரக ஆஸ்பத்திரிகள் இன்று தமிழ்மண்ணிலே




உண்டு. அதனால் மட்டக்களப்பு முதற்கொண்டு கிளிநொச்சிவரை உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கலங்கரை விளக்கமாய் விளங்குவது யாழ் பெரியாஸ்பத்திரியே. இரண்டாயிரம் மக்கள் ஒவ்வொரு நாளும் வெளிநோயாளர் பகுதிக்கு இங்கு வருகின்றார்கள், ஆகையால் முகாமிலிருந்து அடிக்கப்படும் 'ஷெல்' இங்கு விழுந்தால் எத்தனை மக்களின் உயிர் போகும்? வார்ட்டுகளில் தங்கியிருக்கும் நோயாளர் நிலை என்ன? 'ஷெல்' பயத்தில் கட்டிலுக்குக் கீழே பதுங்கும் நோயாளிகள், 'ஷெல்' வருமோ எனச் சுவர் அருகே பதுங்கும் தாதிமார்கள், 'ஷெல்' அடியால் கால்களையும் கைகளையும் முறித்துக்கொண்டு படுத்திருக்கும் நோயாளிகள் போய்ப் பார்த்து வாருங்கள். பத்திரிகையில் எழுதுங்கள். நாம் நடத்தும் போராட்டம் எமக்காக அல்ல; இந்த நோயாளிகட்காக. கஷ்டமுறும் தமிழ் மக்களுக்காக''

என அவர் தமது பேச்சை முடித்துக் கொண்டார் அதைத் தொடர்ந்து எமது மக்கள் படும் துன்பம் பற்றிப் பார்ப்போமே என எண்ணி ஒருவார்டினுள் நுழைந்தேன். அந்தவார்டடின் இலக்கம் 12.

### 12ம் வார்ட்

நவாலியைச் சேர்ந்த ஓர் இளைஞர் அவர் பெயர் சிவலிங்கம் காலில் இரத்தம் தோய்ந்த நிலையில் படுத்திருந்தார். அவர் அருகே தாயும் தகப்பனும் சோகமான நிலையில்! ...''என்னப்பா காலில்'' எனது கேள்வி அவரை நோக்கித் தொடர்ந்தது.

''கொஞ்ச நாளைக்கு முன்பு தையற் கடையில் தைக்கக் கொடுத்த உடுப்பை எடுப்பதற்காக ரவுண் பக்கம் வந்தேன் அயலில் 'ஷெல்' வந்து விழுந்தது. காலில் தலையில் எல்லாம் 'ஷெல்' தெறித்து விழுந்தது. காலில்பட்ட காயத்திற்குத் தொடையில் உள்ள தோலை வெட்டி ஒட்டியிருக்கிறார்கள். பாருங்கள் எனது காலெல்லாம் இரத்தம். தலையில் இருந்த 'ஷெல்' துண்டை நேற்றுத் தான் வெட்டி எடுத்தார்கள்'' என்று கூறவும் பத்திரப்படுத்தி வைத்திருந்த 'ஷெல்' துண்டை தந்தையார் எடுத்துக்காட்டினார்

தொட்டுப் பார்த்தேன் தொட்டுப் பார்த்த விரலே நோ எடுத்தது. அதனை அந்த வாலிபர் உடம்பில் எப்படித் தான் தாங்கினாரோ?

வார்ட்டின் ஒரு மூலையில் இன்னொருவர் சோகமாகப் படுத்திருந்தார். ''என்ன அண்ணை உங்களுக்கு நாலின் என்ன'' என்று பேச்சைத் தொடங்கினேன்!

கதையைக் கேட்டதும் மறந்துவிடு; கண்ணீர் வந்தால் துடைத்துவிடு என்ற பாணியில் அவர் தமது பேச்சைத் தொடங்கினார். ''நான்ஒருமிருதங்க வித்துவான் கோட்டை இராணுவ முகாமுக்கு அண்மையில் உள்ள கிணற்றடியில் குளிக்கப் போனேன்! வந்தது வினை!! இராணுவத்தினர் துப்பாக்கி என் காலைப் பதம் பார்த்தது. இன்று தான் சூட்டினால் காலில் பொருத்தப்பட்ட கம்பியைக் கழட்டி எடுத்தார்கள். எனது தலையணையைத் தாதிமார் எடுத்துப் போய்விட்டார்கள். துணிவிருந்தால் தட்டிக்கேள்''

அந்த வார்ட்டில் இருந்த தாதியிடம் தொடர்பு கொண்டேன் விசாரித்ததில் 'ஷெல்' அடியால் குற்றுயிரும் குலையுயிருமாகவந்த ஒரு நோயாளிக்கு அந்தத்தலையணையைக்கொடுத்தோம் அந்தத்தலையணை இரத்தத்தால் பழுதடைந்துவிட்டது என்ற விபரம் தெரிந்தது.

சுருக்கமாகச் சொன்னால் அந்தநோயாளிக்குக் கொடுக்க மாற்றுத் தலையணை இல்லை. முல்லைக்குத் தேர் கொடுத்த பரம்பரையில்வந்த நாம் சமூக சேவை நோக்கில் எம்மவர் படும் துன்பத்தை பார்க்க இங்கு செல்ல வேண்டும்.

(தொடரும்)

## தமிழ் சிறுவர் தினம்

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழ்சிறுவர் தினத்தை இம்மாதம் 15மதிகதி சனிக்கிழமை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை அறவழிப்போராட்டக்குழு செய்துவருகிறது:

அறவழிப் போராட்டக்குழு முன்னெடுக்கும் இச்சிறுவர் தினத்தன்று சிறுவர் ஊர்வலமும், சிறுவர்களின் பொதுக் கூட்டம், சிறுவர் கலைநிகழ்ச்சிகள், சிறுவர் பிரார்த்தனை, போஷாக்கு விருந்து மற்றும் சிறுவர்களை உளரீதியாக மகிழ்விக்கும் பல்வேறு கலைநிகழ்ச்சிகளையும் நடாத்தஏற்பாடுசெய்துள்ளது. (வா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியியற் கருத்தரங்கு:

# "மிகவும் சீர்கெட்ட நிலையில் எமது கல்விமுறை"

**— இ. முருகையன்**

நல்லூர், திங்கள்

"தாய்மொழி மூலமான கல்விமுறை நமது நாட்டில் பின்பற்றப் படுகிறதென்று என்று பெருமை கொள்ளும் அரசு தமிழ் மக்களின் கல்வி, கலாசார, தொழில் நுட்பப் பாடத் திட்டங்களை எமது பிரதேசத்திற்கு ஏற்றவகையில் திட்டமிடாது சிங்கள மொழிமூலம் ஆக்கப்பட்ட பாடத் திட்டங்களைக் தமிழ் மொழியில் மொழிபெயர்த்துத்தருவதனால் எமது கல்வி முறை மிகவும் சீர்கெட்ட நிலையில் இன்னமும் உள்ளது"

மாணவர் முன்னணியும் மறுமலர்ச்சிக் கழகமும் இணைந்து கல்வியியற் கருத்தரங்கொன்றினை யாழ் பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கில நடாத்தியது. இவ்வரங்கில் கலந்துகொண்டு பேசிய போதே திரு இ. முருகையன் மேற்கண்டவாறு கூறினார்.

பேராசிரியர் ப. சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்ற இவ்வரங்கில் கலாநிதி எஸ். கிருஷ்ணராஜா பேசுகையில், "இன்றைய காலகட்டத்தில் புத்திஜீவிகள் நாட்டைவிட்டு ஓடுகிறார்கள். பலர் வெளிநாடுகளில் முக்கியமாக ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாகச் சென்று குவிகிறார்கள் இந்நிலை மிகவும் வேதனைக்குரியது" என்றார்

திரு சி. சி. இராஜேந்திரா தமது உரையின்போது, '1983ல் ஏற்பட்ட இனக்கலவரத்தைத் தொடர்ந்து மலையகப் பகுதியிலுள்ள பல தோட்டப் பாடசாலைகள் மூடப்பட்டன. 1984 1985-ல் இந்த நிலைமை தொடர்ந்ததும் அல்லாமல் வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்ட ஸ்திரமற்ற நிலையினால் அகதிகளாக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கானோர் கடந்த மூன்றாண்டுகள் வரையில் தமது கல்வியை முற்றாக இழந்த நிலையில் உள்ளனர்" என்று கூறினார்.

சிரேஷ்ட விரிவுரையாளர் வ ஆறுமுகம், கலாநிதி சடா- ஜெயராஜா ஆகியோரும் உரையாற்றினர் இறுதியில் 'பள்ளி எழுந்திடுவீர்' என்ற நாடகமும் அரங்கேற்றப்பட்டது

[மா]

வலைப்பந்தாட்டம்:

## இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், திங்

மாணவ முன்னணியினர் பாடசாலைகளுக்கு இடையே நடாத்தப்படும் பெண்களுக்கானவலைப்பந்தாட்ட போட்டி இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில்நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் இராமநாதன் கல்லூரி எதிர் மானிப்பாய் மகளிர் கல்லூரியும், சாவகச்சேரிமகளிர்மகாவித்தியாலயத்தை எதிர்த்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும், கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணக்கல்லூரியும். இளவாலை கொன்வென்ற் கல்லூரியை எதிர்த்து நடேஸ்வராக் கல்லூரியும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியை எதிர்த்து மகாஜனக்கல்லூரியும், கனகரெட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தை எதிர்த்துவட்டு இந்துக் கல்லூரியும் மோதவுள்ளன.

இப்போட்டியில் இன்று யாழ திருக்குடும்ப கன்னியர் மடம் ஆங்கிலப் பாடசாலை, உடுவில் மகளிர்கல்லூரி ஆகியனவும் பங்குபற்றுகின்றன.

[வி]

## இன்று வேம்படி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ் வேம்படி மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்றுகாலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் டி ராமதாசும் பாரியாரும் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினர்களாகக்கலந்துகொள்வர்.

[ஊ]

உதைபந்தாட்டம்:

## இன்றைய மோதல்

யாழ்ப்பாணம், திங்

யாழ்ப்பாண பாடசாலைகளுக்கிடையே மாணவ முன்னணி இன்று நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டியின் அரைஇறுதி ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயா எதிர் யாழ்ப்பாணக் கல்லூரியும். இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரியை எதிர்த்து சென் ஜோன்ஸ் கல்லூரியும் மோதவுள்ளன.

இப்போட்டிகள் யாவும் இன்று சென் ஜோன்ஸ்கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

[வி]

## கட்டணத்தில் வேறுபாடு

நெல்லியடி, ஞாயிறு

வடபகுதியில் சேவையிலீடுபட்டுள்ள மினிவான்காரர் பயணிகளிடம் பெறும் கட்டணம் அதிகம் வேறுபடுவதாகவும். ஒரேபாதையில் ஓடும் வான்களுக்கிடையே இவ்வித ஏற்றத்தாழ்வு காணப்படுவதாகவும் இது பயணிகளுக்கு விளைக்கும் அநீதியென்றும் துன்னாலைப்பிரஜைகள்குழுத்தலைவர் திரு. ஆ. வ தங்கராசா மினிவான் சங்கத்துச்சுட்டிக் காட்டியுள்ளார்.

தென்னிலங்கையில் நடைமுறையில்இருப்பதுபோலமினிவான் நடத்துநரும் டிக்கட் கொடுப்பது சிறந்ததென அவர் அறிவித்துள்ளார்.

## பதவிஉயர்வு

நெல்லியடி, ஞாயிறு

பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திரு. கே. கணதிப்பிள்ளை அடுத்த ஆண்டுஆரம்பத்திலிருந்து மல்லாகம் மாவட்ட நீதிமன்றநீதிபதியாகப் பதவியுயர்வு பெற்று மாற்றலாகிறார்

## போராளி---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

"கோப்ரல் பண்டார காலில் ஏற்பட்ட காயத்தினால் நடந்துவரமுடியாதிருந்தார். விடுதலைப்புலிகளின் போராளி ஒருவரால் அவர் தூக்கிவரப் பட்டார்

புலிகள் வசமிருக்கும் இந்த இரு சிப்பாய்களும் தமது சகபாடிகளைக் கண்டதும் புளகாங்கிதம் அடைந்தனர். குசலம் விசாரித்தனர் ஆரத் தழுவிக்கொண்டனர்.

[மா]

## பாதுகாப்பின்மை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மட்டக்களப்பைச் சேர்ந்த இம்மாணவன் யாழ்ப்பாணத்தில் காணாமல்போனமையும் இச்சம்பவம் குறித்து இதுவரை எவருக்கும் எதுவும் தெரியாமல் இருப்பதும் மிகுந்த ஆச்சரியமாக இருக்கின்றது

விஜிதரன்மறைவு தமிழ்மக்களிடையே பாதுகாப்பின்மையையும், அச்ச உணர்வையும் ஏற்படுத்துகிறது

இம்மாணவனின் மர்மமறைவுகுறித்து சகலபொதுஸ்தாபனங்களையும், பொறுப்புவாய்ந்த அமைப்புக்களையும் அக்கறை காட்டுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அத்துடன் விஜிதரனை எவராவது தடுத்து வைத்திருப்பின் உடனடியாக அவரை விடுதலை செய்யும்படியும் வேண்டுகிறோம்.

(வா)

## கைதிகளை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக பேச்சுக்களின் பின்னர் திரு கிட்டு திருப்திதெரிவித்தார்.

இருசாராரும் இணங்கிக் கொண்ட கைதிகள் பரிமாற்றம்பற்றி திரு கிட்டு தெரிவித்ததாவது: "விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 19 கைதிகளின் பெயர்களைக் கொண்ட பெயர்ப்பட்டியல் இராணுவத்தினரால் கையளிக்கப்பட்டது.

"தொடர்ந்து அவர்களில் 5 பேரின் பெயர்கள் இராணுவத்தினரிடம் தெரிவிக்கப்பட்டன இவர்கள் கோட்டைக்கு வெளியே கொண்டுவரப்படுமிடத்து இவர்களில் இருவரை நாம் விடுதலை செய்யும்படி கேட்போம்"

"அவ்விருவரும்விடுதலையானதும் எமது பாதுகாப்பிலுள்ள அடம்பனில் கைதான இரு இராணுவத்தினரையும் நாம் விடுதலை செய்வோம்" என்றார்.

உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள், அரசியல் சார்பற்ற மதன்பகுதியைச் சேர்ந்த மதகுருமார். ஸ்ரீலங்கா மக்கள் கட்சி செயலாளர் திரு விஜயகுமாரணதுங்க ஆகியோர் இப்பரிமாற்றத்தின்போது உடனிருப்பார்கள்.

கைதிகள் பரிமாற்றத்தை இராணுவ அதிகாரிகள் ஏற்றுக்கொண்டுள்ளபோதிலும், திரு. விஜயகுமாரணதுங்க ஒரு அரசியல்வாதி என்பதால் அவரை அழைத்துவருவதற்கு அதிகாரிகள் விரும்பவில்லை.

ஆயினும் ஏற்கனவே இது விஷயத்தில் திரு விஜயகுமாரணதுங்க முயற்சிகள் மேற்கொண்டதால அவரும் உடனிருக்கவேண்டுமென்று தாம் வற்புறுத்தியதையடுத்து அவர்கள் இதற்கு சம்மதித்தனர் என்றும் திரு கிட்டுதெரிவித்தார்.

இன்று திங்கட்கிழமை தாங்கள் குறிப்பிட்டவர்களை யாழ் கோட்டை முகாமுக்கு வெளியே கொண்டுவந்ததும். தங்களிடம் இருக்கும் இரு இராணுவத்தினரையும் கோட்டை வாசலில் தமது பரிமாற்ற நிபந்தனைகளின் அடிப்படையில் விடுதலைசெய்வோம் என்று திரு கிட்டு மேலும் தெரிவித்தார்

இதேவேளை கோட்டையிலிருந்து வெளிவந்த ராணுவத்தினர் நேற்று நண்பகல் 12-30 மணியளவில் தமது பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்டு முகாம் திரும்பினர்.

## ராஜினாமா

யாழ்ப்பாணம், செவ்

கடந்த இரண்டு வருடமாக கைதடி சைவச்சிறுவர் இல்ல மேற்பார்வையாளராகப் பணி புரிந்த சு, இராஜையா தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

(ஒ)

## வயல்கள்பாதிப்பு

நெல்லியடி, ஞாயிறு

அண்மையில் பெய்ததொடர்ச்சியான பெருமழை காரணமாக கரவெட்டி தம்பான், கரப்பான் ஆகிய பகுதிகளிலுள்ள நெல்வயல்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. பலஇடங்களில் பயிர்களைமூடித் தண்ணீர் நிற்கிறது. தோட்டப் பயிர்களும் பல பகுதிகளில் மிகவும் பழுதடைந்துள்ளன.

## நவம்பர் 15-ம் திகதி போராட்டநாள்

யாழ்ப்பாணம் திங்

மலையகத் தோட்டத் தொழிலாளர்களுடைய அடிப்படை உரிமைகளில் ஒன்றாகிய பிரஜாவுரிமையைத் பறித்த நவம்பர் பதினைந்தாம் திகதியை போராட்ட நாளாகக்கொள்வதெனவும் வடபகுதியில் பல்வேறு இடங்களில் பொதுக் கூட்டங்கள் நடத்துவதெனவும் தமிழ்பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கெதிரான போராட்டத்திற்கான இணைப்புக்குழு தீர்மானித்துள்ளது

யாழ் மாவட்டத்தில் செயல்படுகின்ற வெகுஜன ஸ்தாபனங்களும் அமைப்புக்களும் இத்தினத்தை தமிழ்பேசும்மக்களுக்கெதிராக நடத்தப்பட்ட முதல் பாரியதாக்குதல் எனக்கருதி நாளை பூரண வெற்றியாக்க உதவும்படியும் இணைப்புக்குழு வேண்டுகோள் விடுப்பதுவின் சகல இயக்கங்களின் ஒத்துழைப்பையும் கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## போராளிகள்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய அரசுக்குத் தெரிவிக்கப் பட்டதையும் கூறினார்.

இதேவேளை இவ்வதிகாரியிடம் தமிழ்நாட்டில தமிழ்ப் போராளிகளுக்கு பயிற்சிமுகாம்கள் உள்ளன எனக்கூறப் படுவது பற்றிக்கேட்ட போது அவர் அதனை மறுத்து அவ்வித முகாம்கள் எதுவும் இந்தியாவில் இல்லை எனக்கூறினார்.

## நண்பர்கள்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாட்டச் சங்கச்செயலாளரும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி முன்னாள் அதிபருமான திரு ஈ கனகலிங்கத்தைச் சந்திக்க விரும்புவதாகத் தெரிவித்தார்.

இவ்விருப்பத்தை திரு கிட்டுவிடம் கேர்ணல் தெரிவிக்கவே, அரசடி வீதியிலுள்ள திரு கனகலிங்கத்தின் வீட்டுக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டார்.

யாழ் விளையாட்டரங்குத் திறப்பு விழாவினபோது இடம் பெற்ற உதைபந்தாட்டப் போட்டிக்கு இலங்கை உதைபந்தாட்டக் கோஷ்டி சார்பில் ஆனந்த விஜயசேகர கோல் காப்பு வீரராக அங்கம் வகித்தார். இக்கோஷ்டி ஜெர்மன் நாட்டு தெரிவுக் கோஷ்டியுடன் அன்று மோதியது குறிப்பிடத்தக்கது

அச்சமயம் திரு கனகலிங்கமும் யாழ் உதைபந்தாட்டச் சங்க சார்பில் கலந்துகொண்டிருந்தார்.

நேற்று நடைபெற்ற இச்சந்திப்பின்போது குறிப்பிட்ட இருவரும் தங்கள் பழைய நட்புறவை நினைவு கூர்ந்து ஆரத்தழுவி உரையாடினர்.

[மா]

கடைசி நேர வரி விளம்பரம்

விற்பனைக்கு

Bairaha Farms Broilers கோழி இறைச்சியும். John Keels இன் பதப்படுத்தப்பட்ட இறைச்சி உணவு வகைகளும் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு வடமாகாண அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள்; The Medical Hall No: 224, Hospital Road, Jaffna. Phone; 22575. C 5557

வெலிங்டன் திரையில்
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதிகா
கவுண்டமணி
கல்லாப்பெட்டி சிங்காரம்
நடித்த
நிலவு சுடுவதில்லை
(கலர்)

இன்று முதல்
லிடோ
10-30, 2-30,4-30,6-30
ROMANCING THE STONE
(Action and Thrills)
[Coluor]

குரு வீடியோ சென்ரர் நேற்றைய வெளியீடு
[1] பாலசந்தரின்
புன்னகை மன்னன்
(பிரமிட் மாஸ்டர்)
★ கமல் ★ ரேவதி
[2] கலைஞர் கருணாநிதியின்
பாலைவனத்து ரோஜாக்கள்
(பிரமிட் மாஸ்டர்)
★ சத்தியராஜ் ★ பிரபு ★ நளினி ★ லட்சுமி
குரு வீடியோ சென்ரர்,
180, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22779. [C-5694]

மிது வீடியோ மூவிசாரின்
நேற்றைய மகத்தான வெளியீடு
புரட்சிக்கலைஞர் விஜயகாந்த், ராதிகா, சரத்பாபு
M. N. நம்பியார் நடித்த
தர்மதேவதை
(தரமான பிரதி)
மிது வீடியோ மூவிஸ்
பிரதான வீதி,
சித்தன்கேணி.
(A-2858)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மத்திய கல்லூரி மாணவதலைவன் கோட்டை இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியானதைக் கண்டித்துஇ இராணுவமுகாமை அகற்றக்கோரியும் மாணவ தலைவர்கள யாழ். கல்விப்பணிப்பளார் திரு. இரா. சுந்தலிங்கத்திடமும், யாழ் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடமும் மகஜர்கள் கையளிப்பதை படங்களில் காணலாம். படப்பிடிப்பு: தேவா

# இழப்புகளைக் கண்டு
## மாணவர் சோர்வடையக்கூடாது

— கல்விப்பணிப்பாளர்

யாழ்ப்பாணம், திங்கள் "யாழ் மாவட்ட கல்விக்கு விடப்பட டிருக்கும் சவாலை மாணவர்கள் ஏற்று சோர்வடையாது கல்வியில் ஊக்கத்துடனும் ஆர்வத்துடனும் கவனம் செலுத்தவேண்டும். மாணவர்கள் இழப்புக்களைக் கண்டு சோர்வடையக் கூடாது

யாழ் மத்திய கல்லூரி மாணவன் விபுல் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதையும் கோட்டை இராணுவ முகாமினை அகற்றக் கோரியும் கடந்த வியாழன் யாழ் நகரில் நடைபெற்ற மௌன ஊர்வலத்தின்பின் இராணுவ முகாமினை அகற்றக்கோரும் மகஜரை மத்திய கல்லூரி மாணவர் தலைவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட யாழ் கல்விப்பணிப்பாளர் திரு இரா சுந்தரலிங்கம் மாணவர்கள் மத்தியிலே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கே மேலும் பேசுகையில் நீங்கள் என்னிடம் கையளித்துள்ள மகஜர் சம்பந்தமாக நான் விரைவில் யாழ் அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டுஅவருடன் ஆலோசித்த பின்னர் எங்களுக்கும் உங்களுக்கும் மாணவ தலைவர்களுக்குமான சந்திப்பினை ஏற்படுத்தி உங்கள் பிரச்சனைக்கு ஏற்ற நடவடிக்கை எடுக்க முயற்சி செய்வேன். இவற்றில் நாம் பங்கு கொள்ளாது விட்டால் பதவி வகிப்பதில் பயனில்லை என்று கூறினார்.

### அரச அதிபரிடம் மகஜர்

யாழ் அரச செயலகத்தின் முகப்பிலுள்ள மேல் தளத்தில் வைத்து மாணவர் தலைவர்களிமிருந்து மகஜரை யாழ் அரசாங்க அதிபர் பெற்றுக்கொண்டார்,

### மகஜர்கள் ஜனாதிபதிக்குப் போய்ச் சேர்கிறதா?

இங்கு ஊர்வலத்தில் பங்குபற்றிய சகல கல்லூரிகளின் மாணவர் பிரதிநிதிகளும் யாழ் கோட்டை இராணுவ முகாமை அகற்றித் தமது கல்வியைத் தொடர விடும்படி கோரியதுடன் அரச அதிபரிடம் கையளிக்கப்படுகின்ற மகஜர்கள் ஜனாதிபதிக்குப் போய் சேர்கிறதா என்ற கேள்வியையும் எழுப்பினார்கள்.

### உரிய நேரத்தில் அனுப்பியுள்ளேன்

இதற்குப் பதிலளிக்கும் வகையில் யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தனதுரையில், நீங்கள் இன்று என்னிடம் கையளித்துள்ள மகஜரை உடனடியாக ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு அனுப்பிவைப்பேன் என்றும் இதுவரை பல்வேறு அமைப்புக்களினால் என்னிடம் கையளிக்கப்பட்ட சகல மகஜர்களையும் நான் உரிய இடத்திற்கு உரிய நேரத்தில் அனுப்பி வைத்துள்ளேன் என்றும் வலியுறுத்திக்கூறினார்.

யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு யாழ். மத்திய கல்லூரி சிரேஷ்ட மாணவர் தலைவன் ஜி. நந்தகுமார் தலைமை வகித்தார்.

ஊர்வலத்தில் வந்த மாணவர்கள் செயலக கட்டிடத்திற்கு முன்னால் குழுமி இருக்க சகல கல்லூரி மாணவர் பிரதிநிதிகளும், அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கமும் செயலக மேல்தளத்தில் நின்று உரையாற்றினர்.

யாழ் அரசாங்க அதிபருக்கும் கல்விப்பணிப்பாளருக்கும் மத்திய கல்லூரி மாணவ தலைவர்களினால் கையளிக்கப்பட்ட மகஜரின் பிரதிகள் இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன், சகல ஸ்தானிகராயங்கள் ஆகியவற்றுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளதாக மாணவ பிரதிநிதிகள் அறிவித்தனர். [வா-கே]

# "பெண்கள் மீதுள்ள கட்டுப்பாடுகள் நீக்கப்படவேண்டும்"

புங்குடுதீவு, ஞாயிறு "இன்றைய சூழலுக்கு ஏற்ப பெண்கள் மீது உள்ள சமூகக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு, அவர்கள் காலத்திற்குத் தேவையான பயிற்சி நெறிகளை கற்க சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும் காந்திக்குக்கூட அகிம்சை வழிப்போராட்டத்திற்கு முதல் முதலில் அடி எடுத்துக்கொடுத்தவள் ஒரு தென் இந்தியத் தமிழ்ப் பெண்ணே."

இவ்வாறு, அண்மையில் வேலணை மத்திய கல்லூரியில் சென் ஜோன் அம்புலன்ஸின் தீவுப்பகுதிக் கிளை அங்குரார்ப்பண வைபவத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றிய டாக்டர் ஆ. பேரின்பநாதன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது; "வைத்திய ஆய்வுகளின்படியும், உளவியல் ரீதியாகவும் பெண்களே ஆண்களைவிடப் பலம்மிக்கவர்கள். பெண்களின் பலம் இடுப்பிலும், ஆண்களின் பலம் தோளிலும் குவிந்துள்ளது. 100 ஆண், பெண் குழந்தைகளின் பிறப்பை எடுத்துக் கொண்டோமானால் பிறக்கும் பெண் குழந்தைகளில் நூற்றுக்கு 99 வீதமும் தப்பிவிடுகின்றது ஆண் குழந்தைகளில் 90 வீதமானவையே பிழைக்கின்றன. இதிலிருந்து நாம் அறியும் உண்மை, எதிர்ப்புச்சக்தி வலுவில் குழந்தைப் பருவம் தொட்டே ஆண்களை விடப் பெண்கள் சக்திமிக்கவர்களாக உள்ளனர்.

விழாவிற்குபிரதமவிருந்தினர்களாக சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் வடமாகாண ஆணையாளர் டாக்டர் திரு. சுகந்தன் ஞானசித்தம்பி. மாவட்ட நீதிபதி திரு ப. பாலவடிவேல். மாவட்டவைத்தியஅதிபர் டாக்டர் திரு சதா கிருஷ்ணதாஸ், தீவுப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரிடாக்டர் திருசுப்பிரமணியம் ஆகியோர்கலந்துகொண்டுசிறப்புரையாற்றினர். [ஊ]

## திருவிளக்கு பூஜை

யாழ்ப்பாணம், திங்கள் வரும் ஞாயிற்றுக்கிழமை 16ம் திகதி வட்டுக்கோட்டை அராலி வடக்கு சிவன் கோயிலில் திருவிளக்குப்பூஜை நடைபெறவிருக்கின்றது.

நாட்டின் சுபீட்சம் கிராமச் சிறப்பு இலட்சுமி கடாட்சம் முதலானவற்றை உத்தேசித்து நடைபெறும் இப் பூஜையில் சுமங்கலிகளும் கன்னியரும் பக்தியுடன் கலந்து கொள்ள அழைக்கப்படுகிறார்கள்.

'விஜிதரன்' விவகாரம்:

# யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்சங்கம் அதிர்ச்சியும் கவலையும்

யாழ்ப்பாணம், திங்கள் யாழ் பல்கலைக்கழக வர்த்தகத்துறை மாணவன் அ. விஜிதரன் திடீரெனக் காணாமல்போனது குறித்து யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் அடைந்துள்ளது:

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: மாணவர்களின் மத்தியில் அச்சத்தையும் விரக்தியையும் இச்சம்பவம் ஏற்படுத்தி உள்ளது. எமது துணைவேந்தர் குறிப்பிட்டுள்ளதுபோல் வெளி மாவட்ட மாணவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி பயில பின்னிற்க வேண்டிய சூழ்நிலையும் இதனால் ஏற்படலாம் என்று ஆசிரியர் சங்கம் அச்சமடைகிறது.

இந்நிலை எமது பல்கலைக்கழகத்துக்கும் இப்பிரதேச மக்களுக்கும் மேலும் அவப்பெயரை ஏற்படுத்தலாம் ஆகவே விஜிதரன் பற்றி தகவல்கள் தெரிந்தவர்கள் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களுக்கு தெரியப்படுத்துமாறு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுக்கின்றது. (வா)

## படைப்பாளியை இழக்கக்கூடாது"

யாழ்ப்பாணம், திங்கள் "எழுத்தாளர் வெ. முருகபூபதி தமது பத்திரிகைத்துறை வேலையில் இருந்து விலகி முழுநேர எழுத்தாளராக மாற வேண்டும் அப்போது தான் உண்மையில் மக்களுக்கு இலக்கிய சேவை செய்ய முடியும், நாம் ஒரு நல்ல பத்திரிகையாளனை இழக்கலாம் ஆனால் சிறந்த படைப்பாளியை இழக்கக்கூடாது"

இவ்வாறு மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா நீர்கொழும்பு எழுத்தாளர் திரு லெ. முருகபூபதியைக் கௌரவிக்குமுகமாக யாழ் நதலினி அரங்கில் நடைபெற்ற தேநீர் விருந்துபசார வைபவத்தில் பேசுகையில் கூறினார். எழுத்தாளர் திரு தி ச வரதர் தலைமை வகித்தார்.

திருவாளர்கள் நெல்லை க. பேரன், நா. சோமகாந்தன், யாழ்வாணன் திரு சிதம்பர திருச்செந்திநாதன் ஆகியோர் திரு லெ. முருகபூபதியின் இலக்கிய சேவைகளைப் பாராட்டிப் பேசினார்கள்.

திரு முருகபூபதி பதிலுரை வழங்குகையில், "யாழ்ப்பாண எழுத்தாளர்களின் அன்பான உபகரிப்பைப்பெற்றுக் கொண்டு நான் நன்றியுடன் நீர்கொழும்பு செல்கிறேன் இங்குள்ள படைப்பாளிகளின் உண்மையான உணர்வுகளை நிச்சயமாக நான் அங்குள்ள மக்களுக்கு எடுத்துரைப்பேன்'' என்றார். திரு பூ. ஸ்ரீதரசிங் நன்றி கூறினார். (ஊ)

## இன்று பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், திங்கள் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு வைபவம் இன்று காலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப் பரிசளிப்பு வைபவத்திற்கு பேராசிரியர் டி. ராமதாஸ் திருமதி ஜி இராமதாஸ் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றார்கள். [வா]


## 24 மாணவர் தகுதி பெற்றனர்

யாழ்ப்பாணம், திங்கள் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இருந்து உயர்தர பரீட்சைக்குத் தோற்றியவர்களில் வர்த்தகத்தில் 71.1 வீதமும் அளவையியலில் 81,1 வீதமும் தமிழ் புவியியலில் 100 வீதமும் இந்து நாகரீகத்தில் 84 8 வீதமும் விலங்கியலில் 72 2 வீதமும் சித்தி பெற்றுள்ளனர். இன்னும் 1ஏ 2பி 1சியும் 1ஏ 1பி 2சியும் பெற்றவர்கள் உட்பட 24 பேர் பல்கலைக் கழக புகுமுக தகுதிபெற்றுள்ளனர் என்றும் வட்டுக்கோட்டைக் கொத்தணி அதிபர் திரு நா. வேலுப்பிள்ளை தெரிவித்தார். [இ]

Computer Programming in
BASIC LANGUAGE
(File handling உட்பட முழுமையான பயிற்சி நெறி)
காலம்: 5 மாதங்கள் கட்டணம்: 1250/-
சேரும்போது செலுத்தவேண்டியது 450மட்டுமே.
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 13-11-86. 9-00a. m.
விபரங்களுக்கு:-
ABLE Technical Studies
JETMOTORS,
K K S ROAD,
CHUNNAKAM.
Branch:
SARSVATHY GARDEN,
CHURCH LANE,
CHAVAKACHCHERI.
[C-5692]

பிரயாண ஒழுங்குகள்
இங்கிலாந்து (U. K.)
டென்மார்க்
பிரயாண ஒழுங்குகள் உடன் செய்து தரப்படும்.
ஒமான் அபுதாபி
அரச நிறுவனங்களில் வேலையாட்கள்.
சவூதி கிளீனேஸ், கெல்பேஸ், எலக்ரிசன், கோட்டல் வேலையாட்கள்.
விரைவான பயண ஒழுங்கு செய்யப்படும்.
பாஸ்போட் பொண்ட் டிக்கற்
விபரங்களுக்கு:-
R. K. பரமசுவாமி (பவானி),
ஆஸ்பத்திரி ஒழுங்கை, இணுவில்.
(C-5645)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உதைபந்தாட்டம்:

# பற்றிக்ஸ் — மகாஜன வெற்றி - தோல்வி இல்லை!

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 'ஏ' பிரிவு ஆட்டம் வெற்றி - தோல்வியின்றி முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.

மேற்படி இரு கல்லூரிகளுக்குமிடையில் நடைபெற்ற 'ஏ' பிரிவு ஆட்டத்தில் இரு கோஷ்டிகளும் சிறப்பாக விளையாடிய போதிலும் சென் பற்றிக்ஸ் கோஷ்டி பல கோல்களைப் போடும் சந்தர்ப்பங்களை நழுவ விட்டுவிட்டது. இடைவேளையின்போது சென் பற்றிக்ஸ் 1-0 கோலால் முன்னணியில் நின்றது. ஆட்டம் முடிவடைவதற்கு சில விநாடிகள் இருக்கும் போது, மகாஜனக் கோஷ்டி "பெனல்டி" மூலம் ஒரு கோலைப் போட்டமையால் ஆட்டம் 'வெற்றி தோல்வி'யின்றி முடிவடைந்தது இப்போட்டிக்கு திரு ஏ செபஸ்தியாம்பிள்ளை மத்தியஸ்தம் வகித்தார்.

"பி" பிரிவுகளிடையே நடைபெற்ற ஆட்டத்தில் மகாஜனக் கோஷ்டி 1-0 கோலால் வெற்றிபெற்றது இப்போட்டிக்கு திரு எஸ் எம் மரியநாயகம் மத்தியஸ்தம் வகித்தார்.

'சி' பிரிவுகளிடையே நடைபெற்ற ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கோஷ்டி 3-1 கோல்களால் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு விமலராசா மத்தியஸ்தம் வகித்தார்.

இப்போட்டிகள் அனைத்தும் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (வி)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

மானிப்பாய் நவாலியில் வசித்துக் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மகேசன் என்பவரின் மரணசாதனத்தின் மரணசாதனத் தத்தவப் பத்திரத்துக்கான விண்ணப்ப விடயத்தில்,

மகேசன் கணேசன்,
சுலைமான் ரெறேஸ்,
கொழும்பு.

மனுதாரர்

வழ. இல: ரி /3995

எதிராக

1. மகேசன் நடேசன்,
பான்ஸ் பிளேஸ்,
கொழும்பு.
2. மகேசன் புவனேந்திரன்.
சுலைமான் ரெறேஸ்,
கொழும்பு.
3 நாகமுத்து கணேசனும்
4. பெண் லலிதாம்பிகை
பராயமற்றவர்:
5. வரதராசா மகள் இஷானி
5ம் எதிர்மனுதாரர் பராயமற்றவர். அவரது பாதுகாவலர் 6ம் எதிர்மனுதாரர் மூலமாக
6. வரதராசாவின் பெண் வசந்தமல்லிகை எல்லோரும் நவாலி.

-எதிர்மனுதாரர்கள்

மேலே இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணசாதன மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு கார்த்திகை மாதம் 14ந் திகதியன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி இவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு ஐப்பசிமாதம் 3ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைந்தது:
வ. மயில்வாகனம்,
மனுதாரின் சட்டத்தரணி. (C 5654)

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

மட்டக்களப்பு
மாவட்ட நீதிமன்றத்திலே

யாழ்ப்பாணம் கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பொன்னம்பலம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்து விடயத்தில்,

மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. 984

கிருஷ்ணபிள்ளை பாலகிட்ணர்,
நீதிபதி வாசஸ்தலம்,
முகாந்தரம் வீதி,
மட்டக்களப்பு.

மனுதாரர்

மேற்குறிப்பிட்டமரணமெய்தியவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்குறிப்பிட்ட நீதிமன்றத்தில் மேற்சொல்லப்பட்ட வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986. கார்த்திகை 25-ம் திகதி காலை 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளையை ஏன் முற்றுனதாக்கக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

நீதிமன்ற ஆணைப்படி.

1986, ஐப்பசி மாதம் 30-ம் திகதி.

சி. இராமலிங்கம்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
மட்டக்களப்பு.

[C-5684]

## இன்று

யாழ்ப்பாணம், திங்

அளவெட்டிப் பகுதியிலுள்ள மாடுகளிற்கு இன்று 10ம் திகதி திங்கட்கிழமை முன் அடைப்பான் நோய்க்கு எதிராக தடுப்பூசி பருந்து தெல்லிப்பழை கால்நடை வைத்தியர் காரியாலயத்தினூடாக இலவசமாக ஏற்றப்படவுள்ளது.

இந் நோய் தடுப்பு மாடுகளிற்கு மிகவும் அவசியமென்பதனால் மாடு வளர்ப்போர் கீழ்வரும் நிலையங்களில் கீழ் குறிப்பிட்ட நேரங்களில் மாடுகளைக் கொண்டு சென்று தடுப்பூசி ஏற்றிக்கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

காலை 9-10 மணி வரை கலைவாணி சனசமூக நிலையம் அளவெட்டி தெற்கு 10-11 மணி வரை அருணோதயாக் கல்லூரி அளவெட்டி, 11-12மணி வரை அளவெட்டி ப நோ. கூ. சங்க வளவில் பிற்கல் -2 மணிவரை அளவெட்டி அளவொல்லை பிள்ளையார் கோவிலடி.

## வெற்றுச்சாக்கு விற்பனை
### உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட 4000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்கு உண்டு. 18-11-86ந் திகதிக்கு முன்னர் ரூபா 100/- கட்டி மேற்படி சங்கத்தில் கேள்விப் பத்திரம்பெற்றுக்கொள்ளவும்

கேள்விப்பத்திரங்கள் யாவும் 21-11-86ந் திகதி பகல் 1 00 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் 'பொதுமுகாமையாளர், உடுப்பிட்டி ப.நோ கூ சங்கம், வல்வெட்டித்துறை' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
உடுப்பிட்டி
ப. நோ. கூ. சங்கம்
[A-3078]

## University of Jaffna, Sri Lanka.

VACANCY: Professor of Saiva Siddhantha (Endowment Chair)

Applications will be received by me from suitable candidates for the Post of Professor of Saiva Siddhantha (Endowment Chair)

2 Closing date for this post will be 31st January 1987

3 The appointment for this post will be on contract for three years.

4 Application forms and particulars may be obtained from this office.

5 Request for application forms should be accompanied by a self addressed Rs 1-50 stamped envelope of 23X10 c.m. in size.

6 Applicants from Government Departments State Corporations and Statutory Bodies should apply through the Head of such institutions.

REGISTRAR

University of Jaffna,
Sri Lanka,
Thirunelvely, Jaffna.
6th November, 1986.

A 3077

## கிளிநொச்சி மாவட்ட—

# விஞ்ஞானக் கல்வி நிலைய பணி வரவேற்கத்தக்கது

கிளிநொச்சி, ஞாயிறு

கிளிநொச்சி மாவட்டக்கல்வி முன்னேற்றத்தில் பெரும் பங்களிப்பை ஆற்றிவரும் விஞ்ஞானக்கல்வி நிலையத்தார் கிளிநொச்சியில் நூலக சேவை சீர்குலைந்ததையடுத்து புதிதாக பொது நூலகம் ஒன்றினை நிறுவியுள்ளது வரவேற்கத் தக்கதாகும்".

இவ்வாறு புதியபொது நூலக திறப்புவிழா வைபவத்திலும் இந்துமாமன்ற சஞ்சிகையான "மருதமலை" வெளியீட்டு விழாவிலும், சமயபாடப் பரீட்சையின் பரிசளிப்பு விழாவிலும் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய உருத்திரபுரம் மகாவித்தியாலய அதிபர் திரு. கா நாகலிங்கம் கூறினார்

"ஜெயந்திநகர் விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் அதிபர் எம் ஏ சனகசிங்கம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது

சிறப்பு விருந்தினராக குருகுல நிர்வாகி வே கதிரவேலு கலந்து கொண்டார்.

இந்து மாமன்ற பரீட்சைச் செயலாளரும் சைவப்புலவருமான பண்டிதர் வே மகாலிங்கம் பேசுகையில் "இந்து சமய பாடப்பரீட்சையை நடத்தி வந்த கொழும்பு விவேகானந்த சபையினர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி முதலான மாவட்டங்களிலும் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும் நடத்தி வந்த சமயபாடப் பரீட்சையை நிறுத்திவிட்டு கொழும்பில் மட்டும் பிரஸ்தாப பரீட்சையை நடத்தி வருவதால் எமது பிரதேச மாணவரின் சமய அறிவை பரீட்சித்துப்பார்க்க வாய்ப்பில்லாதிருக்கிறது இந்த நிலையிலே நாம் சமய பாடப் பரீட்சையை நடத்தி எமது பிரதேச மாணவரின் சமய அறிவிற்கு ஊக்கமளித்து வரவேண்டும்" என்றார் மற்றும் ஆசிரியர் எட்வேட் மரியதாசன், கிராமசேவையாளர் எஸ் தனபாலசிங்கம், ஆசிரியர் திரு. சிவசம்பு செல்வன் இராஜன் வாணவன் ஆகியோரும் பேசினார்கள். (வா)

## "சுகாதார உத்தியோகத்தருக்கு உதாரணமாக விளங்கியவர்"

யாழ்ப்பாணம் புதன்

"சுகாதாரஉத்தியோகத்தர்கள் எப்படியிருக்கவேண்டும் என்பதற்கு ஒரு உதாரண புருஷராக விளங்கியதுடன் காலமறிந்து கடமை செய்வதிலும் வல்லவராகவிளங்கியவர் திரு. குணரத்தினம்" இவ்வாறுபிராந்திய மேற்பார்வை சுகாதார பரிசோதகராக இருந்து ஓய்வு பெறும் திரு. எஸ் குணரத்தினத்திற்கு இலங்கைபொது சுகாதார சங்கத்தின் யாழ். கிளை நடத்திய பிரியாவிடை வைபவத்திற்குதலைமைவகித்து உரையாற்றிய சங்கத்தலைவர் திரு கே. பேரின்பநாதன் கூறினார்.

யாழ். கச்சேரி வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடந்த இவ்வைபவத்தில் திரு குணரத்தினத்திற்கு மதியபோசனவிருந்தளித்துக் கௌரவிக்கப்பட்டது

திரு பேரின்பநாதன் தொடர்ந்துபேசுகையில் ஒருபிராந்திய மேற்பார்வை சுகாதார பரிசோதகருக்கு வேண்டிய அனைத்து அம்சங்களும் குணரத்தினத்திடமுண்டு பிழைகளை மட்டும் கண்டறியும் நோக்கத்துடன் பணிசெய்யாமல் தனது பணியை நேர்மையாக செய்தவர் இவர்என்றார்.

யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி என். கனகசபை, டாக்டர், எம். யோகநாதன் உட்பட சுகாதார உத்தியோகத்தர்களான கே வடிவேலு, க. எஸ் இராஜேந்திரம், ஆ கிருஷ்ணமூர்த்தி, எம். கணேசு, பி. காசிநாதன், எ செல்லையா, எஸ் யோகேந்திரன் பி சிவப்பிரகாசம் ஆகியோரும் திரு குணரத்தினத்தின் சேவையைப் பாராட்டிப் பேசினார்கள். (ஓ)

## புதிய நிர்வாகிகள்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் பண்டத்தரிப்புக்கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகளாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் ஏ எஸ். லோறன்ஸ் உப தலைவர் சங். சகோதரி ஹெட்விஸ். செயலாளர் எஸ் எவ் செவுந்தரம், உப செயலாளர் எஸ். புலேந்திரராசா, பொருளாளர் திருமதி. டேவிட் செயற்குழு உறுப்பினர்களாக நான்கு பேர் தெரிவு செய்யப்பட்டனர். (எ)

## திருவிழாவுக்குச் சென்றவர் திடீர் மரணம்

பருத்தித்துறை ஞாயிறு

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த் திருவிழாவிற்குச் சென்றிருந்த புத்தூரைச் சேர்ந்த முன்னாள் வர்த்தகரொருவர் திடீரென மரணமானார்.

புத்தூர்மேற்கைச் சேர்ந்த சின்னையா பொன்னையா (வயது 70) என்பவரே மரணமானவராவர். இவரது மரணம் சம்பந்தமான மரணவிசாரணைகளை பருத்தித்துறை நீதவான் திரு.கே கணபதிப்பிள்ளையின் உத்தரவின் பேரில் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ் வயிரமுத்து மேற்கொண்டார். புலோலி தெற்கு கிராம சேவை அலுவலர் திரு கே. வேலாயுதபிள்ளை சாட்சிகளை ஆஜர் செய்தார். [சி]




யுகசக்தி

பல்சுவை வார இதழ்
மிக விரைவில்
உங்கள் கைகளில்!

வெளியீடு:-
ஸ்வர்ணம் பப்ளிசிடீஸ்,

125A, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்.

(A-3013)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
திங்கட்கிழமை 10-11-86

# டில்லி சென்ற எம். ஜி. ஆரிடம் விடுதலைப்புலிகளின் புதியயோசனை

கொழும்பு ஞாயிறு
இலங்கை இனப் பிரச்னைக்குத் தீர்வு காணப்படுவது தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் சமர்ப்பித்த அரசியற் தீர்வு யோசனைகள் அடங்கிய அறிக்கையொன்றையும் தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் நேற்றுத் தம்முடன் புதுடில்லி கொண்டு சென்றுள்ளாரெனச் சென்னையில் இருந்துகிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கைத் தமிழ் மக்களின் சுதந்திரம், சௌரவம், அந்தஸ்து, பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிசெய்யும் ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வுக்கு இந்திய அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளை தனதுகுழு மனப்பூர்வமாக ஆதரிக்கும் என விடுதலைப்புலிகளின் தலைவர் இந்த யோசனைகளில் குறிப்பிட்டுள்ளதாக இச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை திரு. எம். ஜி. ராமச்சந்திரன் இலங்கை இனப்பிரச்னை தீர்வுக்கு ஒரு மாற்றுயோசனையை முன்வைக்குமாறு கோரியதாகவும் அவர்கள் சமர்ப்பித்த யோசனையை முதலமைச்சர் தாமே புதுடில்லிக்கு எடுத்துச்சென்றதாகவும் கூறப்படுகின்றது.

மேலும் இந்த மாற்று யோசனை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சமர்ப்பித்த யோசனைகளுடன் ஒத்திருப்பதாக முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் நம்புவதாகவும் தெரியவருகிறது.

இலங்கையரசாங்கம் அரசியல் தீர்வு காண்பதற்காகச் சமர்ப்பித்துள்ள உத்தேச யோசனைகளில் மாகாண அரசுக்கு வழங்க உத்தேசித்துள்ள சட்டவாக்கம், நிறைவேற்று அதிகாரம் போன்றவை மிகக் குறைவிலானவை எனவும். தெரிவித்துள்ள விடுதலைப்புலிகளின் தலைவர் இந்தயோசனைகள் வரையறையற்ற பாரிய அதிகாரத்தை ஜனாதிபதிக்குக் கொடுப்பதாகவும் தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஔ)

## "சமாதானம் தொலைவில் இல்லை" —லலித்

கொழும்பு ஞாயிறு
இலங்கையில் சமாதனம் ஏற்படும் நாள் வெகுதூரத்தில் இல்லை என தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மெல்வ வாயாவில் மகாபொலவைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத்தெரிவித்தார். (ஊ)

## ஈ. பி ஆர் எல் எவ் வரதன், ஈசன், வேணு, கோபி, ராமு, சங்கருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம். திங்கள்.
வவுனியா பூவரசங்குளத்தில் நேற்றுக்காலை இராணுவத்தினருடன் மக்கள் விடுதலைப்படையினர் நடத்திய நேரடிமோதலின்போது வரதன், ஈசன், வேணு, கோபி, ராமு, சங்கர் ஆகிய ஆறுபோராளிகள் வீரமரணமடைந்துள்ளதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக மேற்படி முன்னணி விடுத்துள்ள அறிக்கையொன்றில் எதிரிக்கு எதிராக விட்டுக்கொடாத விடுதலை யுத்தத்தை நடத்தி வீரமரணமடைந்த தோழர்கள் விட்டுச்சென்ற பணியை தொடர்வோமென உறுதி கொள்வதுடன், வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரா)

## வேலணை கல்வி வட்டாரத்தில் 1987 முதல் படகுஇயந்திரம் திருத்தும் பயிற்சி நெறி!

நெல்லியடி, ஞாயிறு
1987 யாழ். மாவட்ட கல்வி அபிவிருத்தித் திட்டத்திற்கு அமைவாக வேலணை கல்வி வட்டாரப் பாடசாலைகளில் படகு இயந்திரங்கள் திருத்துவதற்கான பயிற்சிநெறி அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

மீன்பிடித் தொழிலை மேற்கொண்டுள்ள இப்பகுதி மக்களுக்கு இதுவொரு வரப்பிரசாதமாகும் ஏனெனில் அவர்கள் தங்கள் படகு இயந்திரங்களைப் பழுதுபார்க்க சுமார் 15மைல் கடந்து பல சிரமங்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்திற்கு வரவேண்டியுள்ளது.

## "நிபந்தனையற்ற முறையில் விஜிதரனை விடுவிக்கவும்" ஈரோஸ் அறிக்கை

யாழ்ப்பாணம், திங்
"மாணவர்கள் கடத்தப்படும் சம்பவங்களை வன்மையாக கண்டிப்பதுடன் கடத்தப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் எவ்வித நிபந்தனையுமற்ற முறையில் உடனடியாக விடுதலை செய்யப்படல் வேண்டும்."

யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் கடத்தல் சம்பவம் தொடர்பாக ஈழப் புரட்சி அமைப்பு [ஈரோஸ்] விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-
"யாழ் பல்கலைக்கழகத்தில் கல்விகற்றுவந்த வர்த்தகபீட மாணவனுமட்டக்களப்பைச் சேர்ந்த விஜிதரன் அவர் தங்கியிருந்த வீட்டில்இருந்து காணமல்போய் இருப்பதாய் வந்த பத்திரிகைச் செய்திகள் எம்மை வியப்பில் ஆழ்த்தியது.

பலஇடர்பாடுகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய இத்தருணத்தில் இப்படியான சம்பவங்கள் விடுதலை இயக்கங்களுக்கு அபகீர்த்தியை உண்டுபண்ணும் இம் மாணவன் கடத்தப்பட்ட சம்பவத்துடன் எமது அமைப்புக்கு [ஈரோஸ்] எந்தவிதமான சம்பந்தமும் இல்லையென்பதை உறுதிப்படுத்துகிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரா)

## இன்று மத்தியகல்லூரி மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், திங்
யாழ் மத்திய கல்லூரி இன்று திங்கட்கிழமை வழமை போல் ஆரம்பமாகி நடைபெறும்.

மத்தியகல்லூரி அதிபர் திரு வே. பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் மத்திய கல்லூரி மீண்டும் வழமைபோல் ஆரம்பமாகி நடைபெறவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

கோட்டை இராணுவ முகாம் துப்பாக்கிச் சூட்டுச சம்பவத்தில் இக்கல்லூரிமாணவன் 'விபுல்' பலியானதைத் தொடர்ந்து கடந்த பத்து நாட்களாக மூடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (வா)

## திகதி மாற்றம்

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ்ப்பாணம் ஆரியதிராவிட பாஷாவிருத்திச் சங்கம் நவம்பர் 7ம் திகதி நடத்தவிருந்த தமிழ்மொழி, சைவநெறித்தேர்வுகள் சூரன் போர்காரணமாக நாளை 11ம் திகதிக்குப்பின்போடப்பட்டுள்ளன.

## இன்று

யாழ்ப்பாணம், திங்
கடத்தப்பட்ட மாணவன் விஜிதரன் தொடர்பாக சில முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்காக கைலாசபதி கலையரங்கில் இன்றுகாலை 9 மணியளவில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. சகல மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு மாணவர் அமைப்புக்குழு கேட்டுக்கொள்கிறது.

## "தமிழ்ப் போராளிகள் ஒத்துழைப்புத் தரவேண்டும்" - தமிழக இ. காங்கிரஸ்

சென்னை, நவ 9
இலங்கையின் இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றைக்காண இந்திய மத்திய அரசு எடுத்துவரும் முயற்சிகளுக்கு தமிழ்ப் போராளிகள் ஒத்துழைப்புத்தர வேண்டும்"

இவ்வாறு கோரும் தீர்மானமொன்றை தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சிக் கிளையின் செயற்குழு நிறைவேற்றியுள்ளது. இக்கட்சியின் செயற்குழுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றபோதே இத் தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

இலங்கை இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாண இந்திய மத்திய அரசு எடுத்துவரும் முயற்சிகளுக்கும் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. [ஊ]

## தமிழீழ போர்நிதி இன்று சீட்டிழுப்பு

யாழ்ப்பாணம், திங்
'தமிழீழம் போர் நிதிக்கான மாதாந்த அதிஷ்டலாபச் சீட்டின் முதலாவது சீட்டிழுப்பு இன்று திங்கட்கிழமை மாலை நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மேற்குவீதியில் நடைபெறும்.

தமிழீழ இராணுவ நிதிச் சபையினரால் அதிஷ்டம் பார்க்கப்படவிருக்கும் இச்சீட்டிழுப்பு நிகழ்ச்சிகள் இன்று பி. ப. 3-30 மணிக்கு ஆரம்பமாகும்.

பிற்பகல் 4 மணிக்கு யாழ் சென்றேக் கலைவட்டம் வழங்கும் "என்று தணியும் இந்த...? என்ற இயல் இசை நாடகம் நடைபெற்று தொடர்ந்து பிற்பகல் 5-30 மணிக்கு முதலாவது அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு நடைபெறும். [வா]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O Box 49. Telegram: Eelanadu Telephone: 23389, 24126.

## மரண அறிவித்தல்

### ஐயம்பிள்ளை சுப்பிரமணியம் அரியாலை

ஐயம்பிள்ளை சுப்பிரமணியம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும், செல்லத்துரை, காலஞ்சென்ற தில்லையம்பலம் சிறில் (ரெயில்வே பில்டிங்) அவர்களின் தகப்பனாரும், நாகம்மா, மலர் ஆகியோரின் மாமனாரும், றதி குணசிங்கம், குலேந்திரன், ராசேஸ்வரி, கலாவதி செல்வராணி, சந்திரா, இருதயராணி, புஷ்பராணி, யோகா, லோகநாதன் ஆகியோரின் அன்புபேரனுமாவார் அன்னாரின் பூதவுடல் இன்று காலை 10-00 மணியளவில் [10-11-86] அரியாலையில் இருக்கும் அன்னாரின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தி. இராசமலர்,
534/3, கண்டிரோட், அரியாலை [C-5696]

### யூனியன் ஆறுமுகம்

கந்தரோடையைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி ஆறுமுகம் [யூனியன் ஆறுமுகம், முன்னாள் துறைமுக கூட்டுத்தாபன லிகிதர் - கணக்காளர் மார்க்கண்டு அன் பிறதேஸ் திருகோணமலை] அவர்கள் 8 11 86 இல் இறைவனடி சேர்ந்துவிட்டார். இவர் தங்கம்மாவின் அன்புக்கணவரும், தனபாலசிங்கம் (S S. O) தனேந்திரன் [ஆசிரியர் மாலைதீவு) வரதராசா [உதவி அஞ்சல் அதிபர், வெள்ளவத்தை] சுசீந்திரன் [மாலைதீவு) தயாபரன் [மாலைதீவு] திலகாம்பிகை, அமிர்தாம்பிகை ஆகியோரின் அன்புத்தந்தையும், த. ஞானகலாதேவி [ஆசிரியை மாலைதீவு] சு. றீட்டா ஜீவமலர், க. தங்கராசா [ஆசிரியர் யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை] க. உருத்திரன் ஆகியோரது அன்பு மாமனும், சு ஆராமுதன் சு. ஆரணி, சு ஆரூரான், த. அஜந்தினி ஆகியோரது அன்புப்பேரனுமவாார் அன்னரது ஈமக்கிரியைகள் 10 11-86 இன்று அன்னாரின் கந்தரோடை இல்லத்தில் நடைபெற்று பி. ப. 2-00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக அன்னாரின் பூதவுடல் கந்தரோடை சங்கம்புலவு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
யூனியன் ஆறுமுகம் குடும்பத்தினர்
[C5697]

## மரண அறிவித்தல்

### நவரட்ணம் ஜெயபாலன்

நவரட்ணம் ஜெயபாலன் நேற்று (09-11-86) காங்கேசன்துறையில் காலமாகிவிட்டார். அன்னார் கந்தர் மடத்தைச் சேர்ந்த நவரட்ணம் பரமேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காங்கேசன்துறையைச் சேர்ந்த குலசேகரியின் அன்புக் கணவரும், விஜேநிதினி, மாலினியின் அன்புத் தந்தையும், தவமணி, ஜெயதாஸ், ஜெயக்குமார் [கனடா], ஜெயக்குமாரி, ஜெதீஸ்வரன் [கட்டார்] ஜெயசிறி [பிரான்ஸ்], ஜெயசங்கர், ஜெயவசந்தன், ஜெயகாந்தன், சுதாகர், முகுந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருணகிரிநாதன் [சுன்னாகம் பட்டின சபை], மனோகரன் [சீமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னரது ஈமக்கிரியைகள் இன்று [திங்கட்கிழமை] 10-11-86 2-00 மணியளவில் காங்கேசன்துறை பொதுமயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

தகவல், சி. நவரட்ணம், கந்தர்மடம்.
[-C5698]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org